முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.10.2023) செங்கல்பட்டு மாவட்டம், மறைமலைநகர், மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தின் கூட்டரங்கில், "கள ஆய்வில் முதலமைச்சர்" திட்டத்தின் கீழ், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த திருத்தணி குறிஞ்சி செங்கல் சூளை குழு, திருவள்ளூர் எம்ப்ராய்டரி தொழில் குழுவினர் சந்தித்து அரசு மானியம் வழங்கி வாழ்வாதாரத்தை உயர்த்தியமைக்காக நன்றி தெரிவித்து, கோரிக்கை மனு அளித்தனர். இக்கூட்டத்தில், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் ராகுல்நாத், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன், திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் பிரபு சங்கர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களின்

பல்வேறு நலச்சங்கப் பிரதிநிதிகளுடன் முதல்வர் கலந்துரையாடல்!

செங்கல்பட்டு, அக்.19–

"கள ஆய்வில் முதலமைச்சர்" திட்டத்தின் கீழ், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களின் தொழில் மற்றும் வணிக சங்கப் பிரதிநிதிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள், குடியிருப்போர் நலச் சங்கம், மகளிர் சுயஉதவிக் குழுக்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்துரையாடினார்.

மாவட்டங்களுக்குச் சென்று நிர்வாகப் பணிகளையும், வளர்ச்சி மற்றும் நலத்திட்டப் பணிகளையும் நேரடியாக ஆய்வு செய்யும் "கள ஆய்வில் முதலமைச்சர்" திட்டத்தின் கீழ், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பல்வேறு மாவட்டங்களுக்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு வருகிறார்.

அதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் (17.10.2023) செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் அரசுத் திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்வதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் செங்கல்பட்டு மாவட்டத்திற்கு செல்லும் வழியில், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு நேரில் சென்று திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் இன்று "கள ஆய்வில் முதலமைச்சர்" திட்டத்தின் கீழ், செங்கல்பட்டு மாவட்டம், மறைமலைநகர், மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தின் கூட்டரங்கில், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள், திருமுடிவாக்கம் தொழில்துறை உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பு, தொழில் முனைவோர்கள் கூட்டமைப்பு, குடியிருப்பு நலச்சங்கங்களின் கூட்டமைப்பு, மகளிர் சுயஉதவிக் குழுக்கள், குறு மற்றும் சிறு தொழில்கள் சங்கம் போன்ற பல்வேறு சங்கங்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி அவர்களின் கோரிக்கைகள் குறித்து கேட்டறிந்தார்.

இந்தக் கலந்துரையாடலின் போது, விவசாய சங்கப் பிரதிநிதிகள் சந்தித்து, விவசாய நிலங்களை சேதப்படுத்தும் பன்றிகளை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். அப்போது பன்றிகளை அப்புறப்படுத்து வது தொடர்பாக ஒன்றிய அரசின் வனத்துறையுடன் கலந்தாலோசித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் முதல்வர் என்று தெரிவித்தார்.

மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை கரும்பு விவசாயிகள் சங்கத்தின் நிர்வாகிகள் சந்தித்து, மதுராந்தகத்தில் முதன்மை பதப்படுத்தும் நிலையம் (Primary Processing Centre) அமைத்து தந்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டு, கரும்புக்கான கொள்முதல் விலையை உயர்த்தி தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர்.

திருவள்ளூர் மாவட்ட குறு மற்றும் சிறுதொழில்கள் சங்கத்தின் நிர்வாகிகள் சந்தித்து, புதிய வரி நிலுவைத் தொகை சமாதானத் திட்டத்தை செயல்படுத்தியதற்காக தங்களது நன்றியினை தெரிவித்துக் கொண்டு, கோவிட் தாக்கத்திலிருந்து விடுபட சிறப்புக் கடன் வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர்.

திருமுடிவாக்கம் தொழிற்பேட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் நிர்வாகிகள், சிறுதொழில் வளர்ச்சிக்கு தமிழ்நாடு அரசு அளித்து வரும் ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு, பல்லாவரம் ஜி.எஸ்.டி. சாலையிலிருந்து திருமுடிவாக்கம் தொழிற்பேட்டை வரை உள்ள சாலையை அகலப்படுத்த வேண்டும் என்று முதலமைச்சர் அவர்களிடம் கேட்டுக் கொண்டனர்.

திருமழிசை தொழிற்பேட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் நிர்வாகிகள் சந்தித்து, திருமழிசை தொழிற்பேட்டையில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் வசதி அமைத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர்.

ஆதம்பாக்கம் மற்றும் நங்கநல்லூர் குடியிருப்போர் சங்கத்தின் சார்பில் பட்டா வழங்குவது தொடர்பாகவும், ஆதம்பாக்கம் ஏரி தூர்வாரிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் முதலமைச்சர் அவர்களை கேட்டுக் கொண்டனர்.

திருத்தணி குறிஞ்சி செங்கல் சூளை குழு மற்றும் திருவள்ளூர் எம்ராய்டரி தொழில் குழுவினர் சந்தித்து, திருவள்ளூர் மாவட்ட நிர்வாகத்தினர் அரசு மானியத்தில் எம்ராய்டரி தையல் இயந்திரங்கள் மற்றும் மின்சார தையல் இயந்திரங்கள் வழங்கி வாழ்வாதாரத்தை உயர்த்தியமைக்காக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தனர்.

பல்வேறு சங்கங்களின் கோரிக்கைகளை கேட்டறிந்த தமிழ்நாடு முதலமைச்சர் , அவற்றை பரிசீலித்து உரியவற்றை நிறைவேற்றி தருவதாக அவர்களிடம் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடல் கூட்டத்தில், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் ராகுல்நாத், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன், திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் பிரபு சங்கர், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சிதம்பரம் நடராஜர் கோயிலில்

தீட்சிதர்களால் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டுமானங்களை இந்து சமய அறநிலையத்துறை ஆய்வு செய்யலாம்!

சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு!

சென்னை, அக்.19-

கடலூர் மாவட்டம், சிதம்பரம், அருள்மிகு நடராஜர் திருக்கோயிலில் தீட்சிதர்களால் அனுமதியின்றி முறைகேடாக கட்டப்பட்டு வரும் கட்டுமானங்களை இந்து சமய அறநிலையத்துறையும், தமிழ்நாடு தொல்லியல் துறையும் விரைந்து ஆய்வு மேற்கொள்ள வேண்டுமென நேற்று முன்தினம் (17.10.2023) சென்னை உயர் நீதி மன்ற தலைமை நீதிபதி தலைமையிலான முதன்மை அமர்வு உத்தரவிட்டுள்ளது.

சிதம்பரம், நடராஜர் திருக்கோயிலின் பாரம்பரிய கட்டமைப்பிற்குள் கட்டிடங்கள் கட்டுதல் மற்றும் பல்வேறு முறைகேடுகள் குறித்து ஜி.நட்ராஜ் தீட்சிதர் பொதுநல வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

இவ்வழக்கு நேற்று முன்தினம் (17.10.2023) விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் சிதம்பரம் அருள்மிகு நடராஜர் திருக்கோவிலா னது டினாமினேசனல் (Denomin ational) கோவில் எனவும், முறைகேடுகள் குறித்து தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறை மற்றும் இந்திய தொல்லியல்துறையும் இணைந்து ஆய்வு மேற்கொள்ள வேண்டுமென கோரினார்.

இந்து சமய அறநிலையத் துறை சார்பில் ஆஜரான அரசு சிறப்பு வழக்கறிஞர் என்.ஆர். ஆர். அருண் நடராஜன் அவர்கள் அருள்மிகு நடராஜர் திருக்கோவிலானது பொதுக் கோவில் எனவும், தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் வரும் கோவில் எனவும், முறைகேடான கட்டுமானப் பணிகள் குறித்து இந்து சமய அறநிலையத்துறை மற்றும் தமிழ்நாடு தொல்லியல் துறையும் இணைந்து ஆய்வு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

இதனை பதிவு செய்து கொண்ட மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி எஸ்.வி. கங்காபூர்வாலா மற்றும் நீதிபதி டி.பரதசக்ரவர்த்தி ஆகியோரை கொண்ட முதன்மை அமர்வு, தீட்சிதர்களால் அனுமதியின்றி கட்டப்பட்டு வரும் கட்டுமானங்களை இந்து சமய அறநிலையத்துறையும், தமிழ்நாடு தொல்லியல் துறையும் விரைந்து ஆய்வு மேற்கொள்ள வேண்டுமென உத்தரவிட்டது.

கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி, தகவல் தொழில் நுட்ப அணி செயலாளர் டி.ஆர்.பி.ராஜா வழிகாட்டுதலின்படி, நாமக்கல் கிழக்கு மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம், சார்பு அணி நிர்வாகிகள் பொன் சித்தார்த், சி.விஸ்வநாத், ப.கிருபாகரன், சர்தார்ஜான் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

புதுச்சேரியில் திடீரென நிறம் மாறிய கடல் பகுதி!

புதுச்சேரி, அக். 19 -

புதுச்சேரி தலைமைச் செயலகம் எதிரே கடல் பகுதி செம்மண் நிறமாக மாறியது தொடர்பாக அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

புதுச்சேரி கடற்கரைக்கு நாள்தோறும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து அலையை ரசித்து செல்வார்கள். கோவளம் கடற்கரைக்கு அடுத்தபடியாக சுற்றுலா பயணிகள் பெரிதும் விரும்புவது புதுச்சேரி கடற்கரையாகும்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் வழக்கம் போல புதுச்சேரி கடற்கரையில் சுற்றுலா பயணிகள் வந்து இருந்தனர். அப்போது திடீரெனபுதுச்சேரிதலைமைச் செயலகம் எதிரே உள்ள கடல் பகுதி யில் செம்மண் நிறத்தில் மாறியிருந்தது.

சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரம் கடலில் செம்மண் பரவி இருந்தால் அப்பகுதி மக்கள் அதிர்ச்சி அடைந்தனர். செம்மண் நிறமாக மாறியிருந்த கடலின் அழகை சுற்றுலா பயணிகள் பார்த்த வண்ணம் புகைப்படம் எடுத்து மகிழ்ந்தனர்.

இதுதொடர்பாக மீனவர்கள் ஆரோவில் பகுதியில் அதிக மழை பொழிவு காரணமாக அங்குள்ள செம்மண் சரிந்து நீர் கடலில் கலந்திருக்கும் என்றும், மீண்டும் இது நீல நிறமாக மாறும் என்றும் மீனவர்கள் தெரிவித்தனர்.

இதுதொடர்பாக கடல் நிறம் மாறியதற்கான காரணம் என்ன என்று சுற்றுச் சூழல் அதிகாரிகள் ஆய்வு செய்து வருகின்றனர்.

2023-24-ஆம் ஆண்டிற்கான சித்தா, ஆயுர்வேதா, யுனானி, ஹோமியோபதி மருத்துவ பட்டப்படிப்பு தரவரிசைப் பட்டியல் வெளியீடு!

இந்தியாவிலேயே முதன்முறையாக - முதியோர்களுக்கான சிறப்பு மருத்துவமனை!

விரைவில் தொடங்கப்படும் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!

சென்னை, அக்.19-

முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, 2023-24-ஆம் ஆண்டிற்கான சித்தா, ஆயுர்வேதா, யுனானி மற்றும் ஹோமியோபதி மருத்துவ பட்டப்படிப்பு தரவரிசைப் பட்டியல் வெளியிடப்பட்டது.

இந்தியாவிலேயே முதன் முறையாக முதியோர்களுக்கான சிறப்பு மருத்துவமனை விரைவில் தொடங்கி வைக்கப்படும் என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (17.10.2023), சென்னை, கிண்டி, கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில், இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி துறையின் கீழ், 2023-24 ஆம் ஆண்டிற்கான சித்தா, ஆயுர்வேதா, யுனானி மற்றும் ஹோமியோபதி மருத்துவ பட்டப்படிப்பு தரவரிசைப் பட்டியலை வெளியிட்டார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

தரவரிசைப் பட்டியல் வெளியீடு!

இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி துறையின் கட்டுப்பாட்டில் உள்ள சித்தா, ஆயுர்வேதா, யுனானி மற்றும் ஓமியோபதி ஆகிய மருத்துவப் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கைக்கு தரவரிசைப்பட்டியல் நிகழ்ச்சிக்கு வருகை தந்திருக்கும் துறையின் செயலாளர் அவர்களுக்கும், துறையின் ஆணையர் அவர்களுக்கும், துறையின் உயரலுவலர்கள் அனைவருக்கும் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்து இப்பட்டியலை வெளியிடுவதில் பெருமை கொள்கிறோம்.

தமிழ்நாட்டை பொறுத்த வரை சித்தா, ஆயுர்வேதா, யுனானி போன்ற மருத்துவப்படிப்புகளுக்கு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கேற்ப, பல்வேறு சிறப்பான வசதிகள் செய்யப்பட்டு வருகிறது. அதேபோல் தமிழ்நாட்டில் சித்தா மற்றும் ஆயுர்வேதா மருத்துவ கட்டமைப்புகள் தொடர்ச்சியாக மேம்படுத்தப்பட்டு வருகிறது.

மதுரையில் பெரிய அளவிலான ஹோமியோபதி கல்லூரி கட்டும் பணியும் தொடங்கப்படவிருக்கிறது. எய்ம்ஸ் மருத்துவமனை போன்று சித்தா மருத்துவத்தில் சித்தா எய்ம்ஸ் மருத்துவமனை வேண்டும் என்கின்ற கோரிக்கையினை ஒன்றிய அரசிற்கு விடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி கிடைக்கும் பட்சத்தில் அந்த மருத்துவமனை திருச்சியில் அமைவதற்கு ஏற்றாற்போல் அதற்குரிய இடமும் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது.

ஏற்கெனவே முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சித்த மருத்துவ பல்கலைக் கழகம் தமிழ்நாட்டில் உருவாகுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, சட்டமன்றத்தில் மசோதா நிறைவேற்றப்பட்டு, ஆளுநரின் ஒப்புதலுக்காக காத்திருக்கிறது. இதற்காக 25 ஏக்கர் பரப்பளவில் மாதவரம் பால் பண்ணையில் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த அரசு பொறுப்பேற்ற முதலாம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் சித்த மருத்துவ பல்கலைக்கழக நிர்வாக வசதிக்கான அலுவலகத்திற்கு ரூ.2 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்த அலுவலகம் அறிஞர் அண்ணா அரசு இந்தியமுறை மருத்துவமனை வளாகத்தில் தயார் நிலையில் இருக்கின்றது. எனவே ஆளுநரின் ஒப்புதல் கிடைக்கப் பெற்றவுடன் முதலமைச்சர் அவர்களை கொண்டு இந்த சித்த மருத்துவப்பல்கலைக்கழகம் தொடக்க விழா நிகழ்ச்சிகளும் நடத்தப்படவிருக்கிறது.

ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாட்டில் இருக்கின்ற சித்தா, ஆயுர்வேதா, யுனானி, ஓமியோபதி பாடப்பிரிவுகளுக்கான மாணவர் சேர்க்கை மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டில் அரசு சித்த மருத்துவக்கல்லூரிகள் 2 இடங்களிலும், சுயநிதி கல்லூரிகள் 11 இடங்களிலும் என ஆக மொத்தம் 13 சித்தா மருத்துவக்கல்லூரிகள் இருக்கின்றது. மேலும் ஆயுர்வேதா பிரிவில் ஒரு அரசு மருத்துவக்கல்லூரி, 6 சுயநிதி கல்லூரிகள் என ஆக மொத்தம் 7 ஆயுர்வேதா மருத்துவக் கல்லூரிகள் தமிழ்நாட்டில் இருக்கின்றது.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (17.10.2023), சென்னை, கிண்டி, கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில், இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி துறையின் கீழ், 2023-24 ஆம் ஆண்டிற்கான சித்தா, ஆயுர்வேதா, யுனானி மற்றும் ஓமியோபதி மருத்துவ பட்டப்படிப்பு தரவரிசைப் பட்டியலை வெளியிட்டார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி துறை ஆணையர் திருமதி.மைதிலி.கே.ராஜேந்திரன், தேர்வுக் குழுத் தலைவர் மரு மலர்விழி, இணை இயக்குநர் மரு.பார்த்திபன், மரு.மணவாளன் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

யுனானி பிரிவினைப் பொறுத்தவரை ஒரு அரசு மருத்துவக்கல்லூரி செயல்பாட்டில் இருந்து கொண்டிருக்கிறது. ஓமியோபதி பிரிவைப் பொறுத்தவரை ஒரு அரசு மருத்துவக்கல்லூரி, 11 சுயநிதிக் கல்லூரிகள் என ஆக மொத்தம் 12 மருத்துவக்கல்லூரிகள் செயல்பாட்டில் இருக்கின்றது. தமிழ்நாட்டில் சித்தா, ஆயுர்வேதா, யுனானி மற்றும் ஓமியோபதி மருத்துவக்கல்லூரிகளின் ஒட்டு மொத்த எண்ணிக்கை 33 ஆகும். இந்த 33 கல்லூரிகளுக்கும் இந்த 4 பிரிவுகளுக்கான மருத்துவ சேர்க்கைக்கு அதற்கான தரவரிசைப் பட்டியல் தற்போது வெளியிடப்பட்டிருக்கிறது. அரசு மற்றும் அரசு ஒதுக்கீட்டு இடங்களுக்காக பெறப்பட்டிருக்கும் மொத்த விண்ணப்பங் களின் எண்ணிக்கை 2,695 ஆகும். இதில் தகுதியான மாணவர்களின் எண்ணிக்கையினை பொறுத்த வரை 2,530 ஆக உள்ளது. தகுதியான மாணவர்களின் எண்ணிக்கை எந்த அளவில் இருக்கின்றதோ அதே அளவிற்கு ஏறத்தாழ பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கையும் இருக்கின்றது. எனவே விண்ணப்பித்த அனைவருக்கும் ஏறத்தாழ 90% மாணவர்களுக்கு மருத்துவ படிப்பிற்கான இடம் கிடைப்பதற்குரிய நல்வாய்ப்பும் இருக்கின்றது.

தரவரிசைப்பட்டியலில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவரின் மதிப்பெண் 602 ஆகும்.அரசு பள்ளி மாணவர்களுக்கான 7.5% இடஒதுக்கீட்டிற்கு பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 596, தகுதியான மாணவர்களின் எண்ணிக்கை 556, ஆக இதிலும் கூட விண்ணப்பித்த 90% மாணவர்களுக்கு இதில் வாய்ப்பு கிடைக்க பிரகாசமான நிலை உள்ளது. நிர்வாக ஒதுக்கீட்டிற்காக பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 1,040. இதில் தகுதியான மாணவர்களின் எண்ணிக்கை 968, அகில இந்திய இடஒதுக்கீட்டு பிரிவுகளுக்கு பெறப்பட்ட விண்ணப்ப ங்களின் எண்ணிக்கை 942, தகுதியான மாணவர்களின் எண்ணிக்கை 913 ஆகும்.

அரசு மற்றும் சுயநிதிக் கல்லூரிகளில் உள்ள மொத்த இருக்கைகளின் விவரத்தைப் பொறுத்தவரை சித்தா, ஆயுர்வேதா, யுனானி, ஓமியோபதி மருத்துவ பட்டப்படிப்புகளுக்கான அரசு மருத்துவக்கல்லூரிகளில் உள்ள அரசு ஒதுக்கீட்டு இடங்கள் பொதுப் பிரிவிற்கு 254 ஆகவும், 7.5% இடஒதுக்கீட்டிற்கான இடங்கள் 21 ஆகவும், சுயநிதி மருத்துவம் மற்றும் ஓமியோபதி மருத்துவக் கல்லூரிகளில் அரசிற்கு ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் 862 ஆகவும், 7.5% இடஒதுக்கீட்டிற்கு இடங்கள் 71 ஆகவும், சுயநிதி இந்திய மருத்துவமனை மற்றும் ஓமியோபதி மருத்துவக்கல்லூரிகளில் உள்ள அனைத்திந்திய ஒதுக்கீட்டு இடங்கள் 15% ஆகவும் தமிழ்நாடு அரசால் நிரப்பப்படுபவை 260 இடங்களாகவும், சுயநிதி இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி மருத்துவக்கல்லூரிகளில் உள்ள நிர்வாக ஒதுக்கீட்டு இடங்கள் 545 ஆகவும், அனைத்திந்திய ஒதுக்கீட்டு இடங்களில் ஒன்றிய அரசால் நிரப்பபடுபவை 49 என ஆக மொத்தம் 2,064 இடங்கள் உள்ளன.

ஆளுநரின் ஒப்புதலுக்காக காத்துக்கொண்டிருக்கும் சித்த மருத்துவப் பல்கலைக்கழகம்

26.10.2023 அன்று காலை 10 மணி முதல் மதியம் 12 மணி வரை சிறப்பு பிரிவினருக்கான கலந்தாய்வு அரசுப்பள்ளிகளில் பயில்கின்ற 7.5% இடஒதுக்கீடு ஆகிய இடங்களுக்கு கலந்தாய்வு நடைபெறவிருக்கிறது.

மேலும் 27.10.2023 முதல் 29.10.2023 வரை அரசு ஒதுக்கீட்டு இடங்கள் மற்றும் அரசிற்கு ஒப்பளிக்கப்பட்ட இடங்களுக்கான கலந்தாய்வு நடைபெறவிருக்கிறது. 31.10.2023 அனைத்திந்திய ஒதுக்கீட்டு இடங்களுக்கு கலந்தாய்வு நடைபெற இருக்கிறது. 01.11.2023 முதல் 02.11.2023 வரை நிர்வாக ஒதுக்கீட்டு இடங்களுக்கான கலந்தாய்வு நடைபெறவிருக்கிறது.

கடந்த அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் இருந்தே ஒரு சில பல்கலைக்கழகங்களின் வேந்தர் பொறுப்பு முதலமைச்சர் அவர்களிடம் இருக்கிறது. நமது சித்த மருத்துவ பல்கலைக்கழகத்தில் வேந்தராக முதலமைச்சர் அவர்களும், இணை வேந்தராக அந்த துறையின் அமைச்சரும், துணை வேந்தர் முதலமைச்சர் அவர்களால் நியமிக்கப்படும் நபர் இருப்பார் என்று சட்டதிட்டங்கள் நிறைவேற்றி ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது. ஆனால் ஆளுநர் அவர்கள் ஒப்புதல் அளிக்காமல் உள்ளார். ஒன்றிய ஆயுஷ் அமைச்சர் அவர்களிடம் இது தொடர்பாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில் ஏற்படுத்தப்பட்ட வசதிகள்

சென்னை, கிண்டி, கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை தொடங்கப்பட்ட நாள் முதல் ஒவ்வொரு துறையாக தொடங்கப்பட்டு வருகிறது. டிஜிட்டல் எக்ஸ்ரே வசதி ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே முதன்முறையாக, சிறுகுடல் பரிசோதனை செய்ய Double Ballon Endoscopy கருவி இந்த மருத்துவமனையில் நிறுவப்பட்டுள்ளது. மேலும் அரசு மருத்துவமனைகளில் முதன்முறையாக தானியங்கி எம்.ஆர்.ஐ.கருவி நிறுவப்பட்டுள்ளது.

இருதய நோயாளிகளுக்கான கேத்லேப் பிரிவில் இயந்திரங்கள் பொறுத்தும் பணி நடைபெற்று வருகிறது. இந்த மாதம் இறுதியில் இந்த கேத்லேப் பிரிவு தொடங்கி வைக்கப்படும். கட்டண சிகிச்சை பிரிவு விரைவில் தொடங்கி வைக்கப்படும். மேலும் கூடுதல் சிறப்பாக, இந்த மருத்துவமனை தொடங்கி 3 மாத காலத்திற்கு பிறகு, ஒவ்வொரு நாளும் தோராயமாக 850க்கும் மேற்பட்டோர் சிகிச்சைக்காக வருகின்றனர். அந்த வகையில் இதுவரை 45,000க்கும் மேற்பட்டோர் சிகிச்சைபெற்றுள்ளனர். அரசு மருத்துவமனைகளில் சிறப்பான சிகிச்சை வழங்குவதால், அரசு மருத்துவ சேவையை மக்கள் கூடுதலாக பயன்படுத்தி வருகின்றனர்.

எனவே, சென்னை மட்டும் இல்லாமல் தமிழ்நாடு முழுவதும் அரசு மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை கூடி வருகிறது.

முதியோர்களுக்கான சிறப்பு மருத்துவமனை

கிண்டி, கிங் நோய் தடுப்பு மருந்து மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில், முதியோர்களுக்கான சிறப்பு மருத்துவமனை தொடங்க தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடமும், ஒன்றிய அமைச்சர் அவர்களிடம் நேரம் கேட்கப்பட்டுள்ளது. விரைவில் இந்தியாவிலேயே முதல் முதியோருக்கான மருத்துவமனை இங்கு திறந்து வைக்கப்படும்.

டெல்லி, எய்ம்ஸ் மற்றும் சென்னை கிண்டியில் முதியோருக்கான மருத்துவமனை அமைக்க திட்டமிடப்பட்டது. இதில் டெல்லி, எய்ம்ஸில் இன்னும் பணிகள் முடிவடையவில்லை. முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு, சென்னை கிண்டியில் முதியோர் மருத்துவமனை அமைக்கும் பணிகளை முடித்து திறப்பு விழாவிற்காக தயார்படுத்தியுள்ளோம்.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி துறை ஆணையர் திருமதி.மைதிலி.கே.ராஜேந்திரன், தேர்வுக் குழுத் தலைவர் மரு. மலர்விழி, இணை இயக்குநர் மரு.பார்த்திபன், மரு.மணவாளன் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

தருமபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் ஆலோசனைப்படி,கூட்டுறவு சங்க நிர்வாக தேர்தல், திருவண்ணாமலையில் நடைபெறும் BLA2 ஆய்வு கூட்டம் குறித்த பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றிய செயல்வீரர்கள் ஆலோசனைக்கூட்டம் ஒன்றிய கழக செயலாளர் பி.எஸ்.சரவணன் தலைமையில் நடைபெற்றது.கூட்டத்தில் ஒன்றிய சார்பு அணிகளுக்கான விருப்ப மனு வழங்கப்பட்டது.உடன் மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் தாமோதிரன், பேரூர் கழக செயலாளர் கு.கௌதமன், ஒன்றிய கழக துணைச் செயலாளர்கள் வே.செல்வன், ஜாகிதாசெரீப்.இராஜேந்திரன் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.